செய்தி வெளியீடு எண். 213 நாள். 18.04.2018

## உணவு பதப்படுத்தும் துறையில் மெகா மானியம் வழங்கப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ,ப., அவர்கள் தகவல்

வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறையானது. மத்திய அரசின் கீழ் செயல்படுத்தும் வேளாண் மற்றும் கடல் உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் செயலாக்க கூட்டமைப்புகளை உருவாக்குதல். (Pradan Mantri Kisan SAMPADA Yojana) திட்டத்தில் வழங்கப்படும் நீட்டிக்கப்பட்ட மானியத் தொகையை பெற தகுதி வாய்ந்த தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இத்திட்டமானது மத்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் மூலம் ரூ.6000 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2016-2020-ம் ஆண்டு வரை செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் மூலம் வேளாண் உற்பத்தி வாயிலிருந்து சில்லறை விற்பனை நிலையம் வரை தொடர் சங்கிலி வேளாண்மைக்கான நவீன உட்கட்டமைப்புகளை உருவாக்கிட ஏதுவான தொகுப்பு வாய்ப்பினை உருவாக்குகிறது.

இதன் மூலம் நாட்டின் உணவு பதப்படுத்தும் துறை வளர்ச்சி வாய்ப்பினை பெருமளவு ஊக்கத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல் சிறந்த வருமானம். புதிய வேலைவாய்ப்புகள். விவசாய விளைப்பொருள் வீணாக்கத்தை குறைத்தல். பதப்படுத்தும் திறனை அதிகரிப்பது மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதியை அதிகரிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் மெகா உணவு பூங்காக்கள் ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி உட்கட்டமைப்பு, உணவு பதப்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு விரிவாக்கம், வேளாண் பதப்படுத்தும் கூட்டமைப்புகளுக்கான உட்கட்டமைப்புகள், முன்னோக்கிய மற்றும் (Agro Processing Clusters) பின்னோக்கிய இணைப்புகள், மேலும் உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டிலிருந்தும் தேவையான உட்கட்டமைப்புகளை முன்னோக்கி உருவாக்கப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் 5 வேளாண் செயலாக்க கூட்டமைப்பு (Agro Processing Clusters) அமைக்க அதிகபட்சமாக ஒரு திட்டத்திற்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு மானியத் தொகையாக செய்யப்பட்டுள்ளது. இதன் அதிகபட்ச மானிய தொகையான ரூ.10 கோடியினை ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி மேம்பாடு மற்றும் மதிப்பு கூட்டுதல் போன்ற உட்கட்டமைப்புகளை உருவாக்கத்திற்கு பயன்படுத்தலாம். பிற திட்டங்களான உணவு பதப்படுத்தும் மற்றும் பாதுகாப்பு நீட்டிப்பு, முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இணைப்பு ஆகிய திட்டங்களுக்கு அதிகபட்சமாக ரூ.5 கோடி மானிய தொகை வழங்கப்படும்.

அரசு மற்றும் பொது துறை நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியினை பெறலாம்.

இத்திட்டத்தை தொடங்க ஆர்வம் உள்ளவர்கள் திருவள்ளூரில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம் அல்லது www.mofpi.nic.in என்ற இணைய முகவரியில் இதர செய்தியை பெறலாம்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**